பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் (06.12.2024) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அருணாச்சலேசுவரர் திருக்கோயில் திருக்கார்த்திகை தீபத்திருவிழா 2024 முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, இந்து சமய அறநிலையத்துறை, ஆணையர் பி.என்.ஸ்ரீதர், இந்து சமய அறநிலையத்துறை, கூடுதல் ஆணையர் (நிர்வாகம்) மரு.சுகுமார், மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு. எம்.சுதாகர், மாநில தடகளச் சங்கத் துணைத்தலைவர் மரு.எ.வ.வே.கம்பன் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

முன்னாள் படைவீரர் நலன் காப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது!

கொடி நாளில் பெருமளவு நிதி வழங்கி - முன்னாள் படை வீரர்களுக்கு நம் நன்றியை காணிக்கையாக்குவோம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் – படைவீரர் கொடிநாள் செய்தி!

சென்னை, டிச. 8-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள படைவீரர் கொடி நாள் செய்தி வருமாறு:-

தம் பெற்றோரையும், தாம் பெற்றெடுத்த செல்வங்களையும், உற்ற மனைவியையும், உறவினர்களையும் பிரிந்து, பிறந்த நாட்டின் பெருமை காத்திடும் முப்படை வீரர்களின் தியாகத்தை நினைவில் நிறுத்தும் திருநாள், "படைவீரர் கொடி நாள்". இக் கொடி நாள் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 7-ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது.

நாட்டின் எல்லைகளையும், நமது சுதந்திரத்தையும் காத்திடும் பணியில் எண்ணற்ற படைவீரர்கள் தங்கள் இன்னுயிரை ஈந்திருக்கிறார்கள். எத்தனையோ ஆயிரம் வீரர்கள் தங்கள் உடல் உறுப்புகளை இழந்திருக்கிறார்கள். ஏனையோர், எப்பொழுது எத்தகைய துன்பம் வந்தாலும், சிறிதும் அஞ்சாமல் தங்கள் கடமையே பெரிதென்று எண்ணிப் பணியாற்றுகிறார்கள்.

இவர்கள் தனி மனிதர்கள் அல்ல. தங்கள் குடும்பத்தினரையும் காப்பாற்றும் பொறுப்பு இராணுவ வீரர்களுக்கு உண்டு. அந்தப் பொறுப்பினை நாட்டு மக்கள் தங்கள் கடமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இராணுவ வீரர்களுடைய குடும்ப நல்வாழ்வுக்கும், பாதுகாப்புக்கும், பொருள் உதவியும், பிற உதவிகளும் செய்திட வேண்டும் என்பதை நாடு முழுவதும் கொண்டாடப்படும் இந்தக் கொடி நாள் நம் அனைவருக்கும் நினைவூட்டுகிறது.

பல நலத் திட்டங்களை வழங்கி, முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் நலன் காப்பதில், நமது மாநிலம் முன்னோடி யாகத் திகழ்கிறது. எனவே, இவ்வாண்டு கொடி நாளிலும் பெருமளவில் நிதி வழங்கி, முன்னாள் படைவீரர்களுக்கும், அவர்தம் குடும்பத்தா ருக்கும் நம் நன்றியையும் நல்வணக்கத்தையும் காணிக்கையாக்குவோம்.

இவ்வாறு அச்செய்தியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

முன் ஆவணப் பதிவு வில்லைகளைப் பயன்படுத்தி – டிச.5 ஒரே நாளில்

238 கோடி ரூபாய் வருவாய் ஈட்டி சாதனை!

பதிவுத் துறை வரலாற்றில் புதிய மைல்கல்! அமைச்சர் பி.மூர்த்தி பெருமிதம்!

சென்னை, டிச.8-

பதிவுத்துறை செய்தி வெளியீடு வருமாறு :

தமிழ்நாடு அரசின் வருவாய் ஈட்டும் துறைகளில் முக்கிய துறையாக விளங்கி வரும் பதிவுத்துறையின் வரலாற்றில் இதுவரையில் இல்லாத வகையில் 2024ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ரூ.1984.02/ கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இதனை கடந்த வருடம் நவம்பர் மாதம் அடைந்த வருவாயினை ஒப்பிட்டு பார்க்கும் போது இந்த நவம்பர் 2024ம் மாதத்தில் கூடுதலாக ரூ.301.87/ கோடி வருவாய் ஈட்டி சாதனை படைக்கப்பட்டுள்ளது.

மேலும் 05.12.2024 அன்று கார்த்திகை மாத சுப முகூர்த்தநாளில் ஆவணங்கள் அதிக அளவில் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் என்பதால் சிறப்பு நிகழ்வாக பொதுமக்கள் பயன் பெறும் வகையில் முன்பதிவு வில்லைகள் 100 லிருந்து 150 ஆக உயர்த்தப்பட்டது.

அதன்படி பொது மக்கள் உயர்த்தப்பட்ட முன் ஆவணப்பதிவு வில்லைகளை பயன்படுத்தி கடந்த 05.12.2024 அன்று ஒரே நாளில் இதுவரையில் இல்லாத அளவில் அரசுக்கு ரூ.238.15/ கோடி (ரூபாய் இருநூற்று முப்பத்தெட்டு கோடியே பதினைந்து லட்சம்) வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு நாள் வருவாய் வசூலில் புதிய மைல்கல்லை பதிவுத் துறை எட்டியுள்ளது.

இவ்வாறு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

வங்கக் கடலில்

குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி!

வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, டிச. 8-

இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பின் படி, பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல், ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவியதாகவும், இதன் காரணமாக, தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளதாகவும், அடுத்த 24 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக இது வலுவடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது மேற்குவடமேற்கு திசையில் நகர்ந்து, 12ம் தேதி வாக்கில் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் இலங்கை தமிழக கடற்கரையை நோக்கி நகரக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரியில் வரும் 11ம் தேதி முதல் கனமழை பெய்யக்கூடும் எனவும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அரசுப் பேருந்தில் பயணி தவறவிட்ட லேப்டாப்பை பயணியிடம் சேர்ப்பதற்கு உதவி!

போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கருக்கு பயணி நன்றி!

இரவில் தொலைபேசியில் அழைத்து உதவி கோரியதையடுத்து – அமைச்சர் உடனடி நடவடிக்கை!

சென்னை, டிச. 8-

05.12.2024 அன்று இரவு 8.15 மணி அளவில், விழுப்புரம் அரசு போக்குவரத்து கழகத்தைச் சார்ந்த அரசு பேருந்து சிதம்பரத்திலிருந்து சென்னைக்கு புறப்பட்டது. இப்பேருந்தில் ஏறிய இளைஞர் சந்துரு கடலூர் செல்ல பயண சீட்டு எடுத்துள்ளார். அவர் தான் கொண்டு வந்த லேப்டாப் பையை இருக்கைக்கு மேல் உள்ள சுமை வைக்கும் இடத்தில் வைத்துவிட்டு, வலது பக்க கடைசி இருக்கையில் அமர்ந்துள்ளார்.

தூங்கிக் கொண்டே பயணித்த அவர் கடலூர் பேருந்து நிலையம் வந்ததும் தூக்க கலக்கத்தில் தான் கொண்டு வந்த லேப்டாப் பையை மறந்து விட்டு பேருந்தில் இருந்து இறங்கி வீட்டிற்குச் சென்று விட்டார். வீட்டிற்கு போய் சேர்ந்த பிறகு குடும்பத்தினர் "போகும் போது கொண்டு போன லேப்டாப் பை எங்கே?" என்று கேட்க, பிறகுதான் சந்துருவுக்கு பேருந்தில் லேப்டாப் பையை வைத்துவிட்டு வந்தது ஞாபகம் வந்துள்ளது.

இந்நிலையில் உடனடியாக புதுச்சேரியில் உள்ள தனது நண்பர்களை தொடர்பு கொண்டு, அவர்களிடம் விவரத்தைக் கூறி, பேருந்தின் அடையாளத்தையும் குறிப்பிட்டு, பேருந்து புதுச்சேரி வந்ததும் அதில் ஏறி லேப்டாப் பையை எடுத்து வையுங்கள் என்று கூறி, பயணச் சீட்டில் இருந்த பேருந்து எண்ணையும் தனது நண்பர்களிடம் கொடுத்து இருக்கிறார். அதன்படி அவரது நண்பர்களும் புதுச்சேரி பேருந்து நிலையத்தில் வந்து காத்திருந்துள்ளனர். ஆனால் அப்பேருந்து புதுச்சேரி பேருந்து நிலையத்திற்கு வந்து சென்றதை சரியாக கவனிக்காததால் பேருந்து சென்று விட்டதாக சந்துருவிடம் அவரது நண்பர்கள் கூறியுள்ளார்கள்.

சந்துரு என்ன செய்வது என்று தெரியாமல் தனது நண்பர் ஒருவர் மூலம் நள்ளிரவில் போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கரை தொடர்பு கொண்டுள்ளார். 'அந்த லேப்டாப்பில் தான் எனது வேலை தொடர்பான முக்கிய தகவல்கள் இருக்கிறது என்றும், தமது வாழ்வே அதில் தான் இருக்கிறது என்றும், தூக்கத்தில் மறந்துவிட்டு பேருந்தில் இருந்து இறங்கி விட்டதாகவும், என் தவறுதான் என்றும், எப்படியாவது அதை கண்டுபிடித்து கொடுங்க சார்' என்று உருக்கமாக கோரிக்கை வைத்திருக்கிறார்.

போக்குவரத்து துறை அமைச்சர் உடனடியாக விழுப்புரம் போக்குவரத்து கழக மேலாண் இயக்குனரைத் தொடர்பு கொண்டு, 'கடலூரில் இருந்து 05.12.2024 அன்று இரவு புறப்பட்ட பேருந்தில் இளைஞர் ஒருவர் லேப்டாப்பை தவறவிட்டதாக குறிப்பிட்டு, அது எந்த பேருந்து என்று விசாரித்து, லேப்டாப் பையை பத்திரமாக எடுத்து வைக்க சொல்லுங்கள், என்று தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து சந்துரு பயணித்த பேருந்து எது என்றும் அதில் பணி மேற்கொண்ட நடத்துனர் யார் என்றும் விசாரித்து 20 நிமிடத்தில் லேப்டாப்பை கிடைத்துவிட்டதாக அமைச்சருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் அந்த லேப்டாப் பையை கடலூர் வழியாக செல்லும் பேருந்தில் கொடுத்து அனுப்பி திரு.சந்துரு என்ற பயணியிடம் ஒப்படையுங்கள் என்று அமைச்சர் கூற, அதன்படி நேற்று முன்தினம் (06.12.2024) காலை 7.00 மணி அளவில் கடலூர் சென்ற பேருந்தில் லேப்டாப் பை எடுத்துச் செல்லப்பட்டு சந்துருவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, பயணி சந்துரு, தனது லேப்டாப் பை கிடைக்க உதவிய போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கருக்கும், போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

சங்கரன் கோவில் நகரக் கழக முன்னாள் செயலாளர்

பரம பால் பாண்டியன் மறைவு!

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச.8

தென்காசி வடக்கு மாவட்டம் - சங்கரன் கோவில் நகரக் கழக முன்னாள் செயலாளராக 20 ஆண்டு காலம் பதவி வகித்தவரும், கழக முன்னோடி யுமான பரம பால் பாண்டியன் நேற்று முன்தினம் (6.12.2024 - வெள்ளிக்கிழமை) இரவு 9 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சங்கரன்கோவில் நகரில் சோதனையான கால கட்டங்களிலும் கழகம் தொய்வின்றி வளர்க்கப்பட தன்னலம் கருதாது தொண்டாற்றியவர், பரமபால் பாண்டியன்.

கூட்டுறவு விற்பனை சங்கம் மாநில துணைத்தலைவராகவும் சங்கரன்கோவில் கூட்டுறவு விற்பனை சங்க தலைவராகவும் பரம பால் பாண்டியன் பணியாற்றியுள்ளார். இவருக்கு திருமணம் ஆகவில்லை. பரம பால்பாண்டியன் மறைந்த தகவல் அறிந்ததும் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ.அவரது இல்லத்திற்கு சென்று மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

பரம பால்பாண்டியன் மறைவுற்ற செய்தியறிந்து வருந்திய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரின் குடும்பத்தாருக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

தி.மு.க.
இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 7, 8 – இல் ஏழு சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சிகள் நடைபெற இருக்கின்றன. அவற்றின் விவரம் வருமாறு :

நாள்	நேரம்	மண்டலம்	சட்டமன்றத் தொகுதி	இடம்
08.12.2024 ஞாயிற்றுக்கிழமை	காலை 9.00 மணி	7	ஓரத்தநாடு	எல்.ஜி.வி.கே. திருமண மண்டபம், மன்னார்குடி சாலை, ஓரத்தநாடு.
	மாலை 4.00 மணி		கந்தர்வக்கோட்டை	வாசுகி மஹால், பேருந்து நிலையம் அருகில் கீரனூர், புதுக்கோட்டை.
	காலை 9.00 மணி	8	ஸ்ரீவில்லிபுத்தூர்	ராமராஜ் திருமண மண்டபம், மேட்டுத் தெரு, தேவர் சிலை அருகில், ஸ்ரீவில்லிபுத்தூர்.
	மாலை 4.00 மணி		இராஜபாளையம்	ஆனந்தா கார்டன், தென்காசி சாலை, இராஜபாளையம்.

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 05-12-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி